கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கூடலூர்,

முன்னிலை : திரு. ப. முருகேசன், பி.எல்.,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, கூடலூர்.

2026-ம் ஆண்டு ஜீன் திங்கள் 18- ஆம் நாள் வியாழன் கிழமை

(2057 திருவள்ளுவராண்டு, ஸ்ரீ பராபவ வருடம், ஆனி மாதம் 04-ஆம் நாள்)

<u>அசல் வழக்கு எண். 7/2012</u>

CNR.No.TNNS070000052012

தமிழரசி . . . வாதி

// எதிர் //

1) சேர்மன்,
CSI ஹோலி டிரினி சர்ச்,
பந்தலூர், நீலகிரி.

2) பேரியஸ் பிரிஸ்ட்,
CSI ஹோலி டிரினி சர்ச்,
பந்தலூர், நீலகிரி.

3) அரசுக்காக,
நீலகிரி மாவட்ட ஆட்சியர்,
உதகமண்டலம்.

4) தாசில்தார்,
பந்தலூர். . . . பிரதிவாதிகள்

இவ்வழக்கு கூடலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 16.03.2012-ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மாண்புமிகு நீலகிரி மாவட்ட நீதிமன்றம் உத்தரவு படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறது. இவ்வழக்கானது 09.06.2026-ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஏ.ஜெகதீசன் அவர்கள்

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:32:20 +0530

முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு. கோஷி பேபி, திரு.ஏ.இம்மானுவேல் ஆகியோர் முன்னிலையாகியும், 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.பாபு அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இவ்வழக்கு சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று 18.06.2026-ஆம் தேதி இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>தீர்ப்புரை</u>

தாவா சொத்தை பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் பெயரில் உள்ள வருவாய் பதிவேடுகள், சுவாதீன சான்றிதழ், அடங்கல் மற்றும் சிட்டா ஆகியவை செல்லாதது என்று விளம்புகை மற்றும் அதனை ரத்து செய்யவும், தாவா சொத்தில் அமைதியாக சுவாதீனத்தில் இருந்து வரும் வாதியை, 1, 2 பிரதிவாதிகள், அவரது நபர்கள், அவரது முகவர்கள் சட்ட முரணாக வெளியேற்றுவதில் இருந்து தடை செய்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது.

<u>2). வழக்குரையின் சுருக்கம்</u> :

(i). வாதியின் முன்னோர்கள் சமூகத்தில் ஏழ்மையான வகுப்பை சார்ந்தவர்கள். அவர்கள் தேயிலை தோட்டம் மற்றும் தொழிற்சாலையில் பணி செய்வதற்காக நீண்ட ஆண்டுகளுக்கு முன்பாக சேலம் மாவட்டத்திலிருந்து நீலகிரி மாவட்டத்திற்கு

அழைத்து வரப்பட்டவர்கள். இவ்வாறாக வாதியின் மாமனாராகிய குழந்தை மேஸ்திரியும் அழைத்து வரப்பட்டிருக்கிறார். வாதியின் மாமனார் தாவா சொத்திற்கு அருகில் இருந்த பாரி ஆக்ரோ இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டில் மேற்பார்வையாளராக வேலை செய்து வந்தார்.

(ii). வாதியின் மாமனார் குழந்தை மேஸ்திரி தாவா சொத்தை 1950ஆம் ஆண்டு ஆக்கிரமிப்பு செய்து, அதில் கதவு எண்.12/147(பழையது), புதிய கதவு எண்.14/378 வீடு கட்டி வசித்தும், மீதி இடத்தில் விவசாயம் செய்தும் குடியிருந்து கொண்டு வந்திருக்கிறார். தாவா சொத்தின் பழைய சர்வே எண்.521 ஆகும். அது வாதியின் குடும்பத்தின் சுவாதீன அனுபோகத்தில் நீண்ட காலமாக இருந்து வருகிறது.

(iii). வாதியின் மாமனார் குழந்தை மேஸ்திரி இறந்த பின்பு, வாதியின் கணவர் ஜெயவேல் வாரிசு முறையில் தாவா சொத்தை அடைந்து தாவா சொத்திற்கு நிலவரி மற்றும் வீட்டு வரி செலுத்தி வந்திருக்கிறார். வாதியின் கணவரின் இறப்பிற்கு பின்பு வாதி வாரிசு முறையில் தாவா சொத்தை அடைந்து வீட்டு வரியும், தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பு S.C.No.227-க்கு மின் கட்டணம் செலுத்தி வருகிறார்.

(iv). CWS லிமிடெட் நிறுவனத்தினர் தாவா சொத்து CWS லிமிடெட் நிறுவனத்திற்கு சொந்தமானது என்று கூறி, வாதியின் மாமனாரை தாவா சொத்தில் இருந்து காலி செய்ய வேண்டி அறிவிப்பு கொடுத்து, வாதியின் குடும்பத்தார்களை வெளியேற்ற முயற்சி செய்ததால் கடலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில்

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:32:27 +0530

வாதியின் கணவர் அ.வ.எண்.69/1979 வழக்கை CWS India (P) Ltd நிறுவனத்திற்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்தார்.

(v). அதன் பின்பு CWS (P) Ltd நிறுவனத்தினர் அ.வ.எண்.36/1980 வழக்கை வாதியின் கணவருக்கு எதிராக தாவா சொத்திலிருந்து வெளியேற்ற தாக்கல் செய்தார்கள். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதால், மாண்புமிகு உதகை மாவட்ட நீதிமன்றத்தில் CWS லிமிடெட் நிறுவனத்தினர் மேல்முறையீட்டு வழக்கு எண்.15/1987 தாக்கல் செய்து அவ்வழக்கு அனுமதிக்கப்பட்டது. அதன் பேரில் CWS லிமிடெட் நிறுவனத்தினர் E.P.No.16/1991 வாதியின் கணவருக்கு எதிராக தாக்கல் செய்து, அம்மனு அனுமதிக்கப்பட்டது. பின்பு வாதியின் கணவருக்கும், CWS லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே ஏற்பட்ட சமரசம் படி வாதியின் குடும்பத்தார் தொடர்ந்து குடியிருக்க அனுமதிக்கப்பட்டது. அது முதல் தாவா சொத்தில் வாதி குடும்பத்தினர் தற்போது வரை அனுபோகம் செய்து வருகிறார்கள்.

(vi). பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு அந்நியர்கள். வாதி தாவா சொத்தின் சிறு பகுதி நிலத்தை மூசா, பாப்பட்டி, ரவிசந்திரன், கமலாதேவி, பரமசிவம், விசுவநாதன் ஆகியோர்களுக்கு விற்பனை செய்து அதில் அவர்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். தாவா சொத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக வாதி அவரது முன்னோர்கள் விவசாயம் செய்து இதுநாள் வரை சுவாதீன அனுபோகம் செய்து வருகிறார்கள். அதனால், 1, 2 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டதல்ல.

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:32:31 +0530

(vii). தாவா சொத்தில் வாதி பருவகால பயிர்களான வாழை, உருளை மற்றும் காய்கறிகளை பயிரிட்டு, அதிலிருந்து வருமானம் அடைந்து வருகிறார். மேலும், வாதி அரசுக்கும், நகராட்சிக்கும் தவறாமல் வரி செலுத்தி வருகிறார். 1, 2 பிரதிவாதிகளின் சொத்து நான்கு பக்கமும் சுற்றுசுவர் எழுப்பி அதனுள் தேவாலாயம், கல்லறை, குடியிருப்பு போன்றவற்றை சுமார் 15 வருடங்கள் முன்பு கட்டியுள்ளார்கள். மேலும் 1, 2 பிரதிவாதிகள் தெற்கு பகுதி சுற்றுசுவர் கட்டியுள்ளார்கள். அதையடுத்து ஊட்டி கள்ளிக்கோட்டை நெடுஞ்சாலையிலிருந்து கிழக்கு நோக்கி பாரி ஆக்ரோ இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் தேயிலை தோட்டத்திற்கு நடுவில் 5 அடி அகலத்திலும் 200 மீட்டர் நீளத்தில் சிமெண்ட் சாலை உள்ளது. பாரி ஆக்ரோவின் தேயிலை தோட்டத்தை தாண்டி தான் வாதியின் சொத்து உள்ளது. எனவே தாவா சொத்திற்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இரண்டும் தனித்தனியாக இருக்கிறது.1970ஆம் ஆண்டு வாதி 1ஏக்கர் பூமியை போகா கவுடரிடம் இருந்து கிரயம் பெற்று, தற்போது வரை சுவாதீன அனுபோகம் செய்து வருகிறார்.

(viii). கடந்த 30.08.2006-ஆம் தேதி 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்திலிருந்து வாதியையும், பிற குடியிருப்பாளர்களையும், வருவாய் ஆவணங்கள் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் இருப்பதாக கூறி வெளியேற்ற முயற்சி செய்தார்கள். அதனை வாதி தடுத்துவிட்டார். அதனால், வாதியும், பிற குடியிருப்பாளர்களும் சேர்ந்து 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக அ.வ.எண்.84/2006 வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள். அவ்வழக்கு 02.11.2010ஆம் தேதி தவறுகைக்காக தள்ளுபடி

P. MURUGESAN Digitally signed by P. MURUGESAN Date: 2026.06.18 17:32:34 +0530

செய்யப்பட்டிருக்கிறது. அவ்வழக்கை திரும்ப கோப்பிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அது நிலுவையில் இருந்து வருகிறது.

(ix). தாவா சொத்திற்கு வருவாய் பதிவேடுகளில் எவ்வித தாய் ஆவணம் அல்லது அடிப்படை ஆவணங்கள் ஆதாரம் எதுவும் இன்றி சட்டத்திற்கு முரணாக 1, 2 பிரதிவாதிகளின் பெயரை 3, 4 பிரதிவாதிகள் பதிவு செய்திருக்கிறார்கள். அது சட்ட முரணானது ஆகும். அதனால், அந்த வருவாய் ஆவணங்கள் சட்டப்படி செல்லக்கூடியதல்ல. அந்த ஆவணங்கள் மூலம் 1, 2 பிரதிவாதிகளுக்கு உரிமை எதுவும் இல்லை. மேலும், 21.11.2011ஆம் தேதி 1, 2 பிரதிவாதிகள் அவரது நபர்கள், தாவா சொத்திற்கு வந்து வாதியையும், பிற குடியிருப்பாளர்களையும் காலி செய்ய முயற்சி செய்தார்கள். அதனை, வாதி தடுத்துவிட்டார். 1, 2 பிரதிவாதிகள் மோசடியாக வருவாய் ஆவணங்களை பெற்றிருக்கிறார்கள். 1, 2 பிரதிவாதிகள், வாதி மற்றும் பிற குடியிருப்பாளர்கள் வீடுகளை 10.03.2012ஆம் தேதி சேதப்படுத்த முயற்சி செய்தார்கள். அதனை, அங்கிருந்த மக்கள் தடுத்துவிட்டார்கள்.

(x). அதனால், 1, 2 பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வருவாய் ஆவணங்கள் செல்லக்கூடியதல்ல என்று விளம்புகை செய்யக்கோரியும், அதனை ரத்து செய்ய வேண்டியும், 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:32:37 +0530

<u>3). 1, 2 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>:

(i). வாதியின் வழக்கு பொய்யானது, அற்பத்தனமானது மற்றும் அலைக்கழிவானது. சட்டம் அல்லது பொருண்மைகள் படி வாதியின் வழக்கு நிலைக்கதக்கதல்ல. பிரதிவாதிகளால் குறிப்பாக ஒத்துக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மற்ற வழக்குரை சங்கதிகள் அனைத்தும் பிரதிவாதிகளால் மறுக்கப்படுகிறது. அதனை வாதியே கண்டிப்பாக நிரூபித்துக்கொள்ள வேண்டும். தாவா சொத்தான புல எண்.2287/8 சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷனுக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்தை கிரயம் பெற்ற தேதியில் இருந்து மேற்படி டிரஸ்ட் அசோசியேஷன் உரிமை மூலத்துடன் முழு சுவாதீனத்தில் இருந்து வருகிறது.

(ii). வாதி தாவா சொத்திற்கு அந்நியர். அவருக்கு உரிமை மூலம், சுவாதீனம் மற்றும் சட்ட உரிமை தாவா சொத்தை பொறுத்து இல்லை. வாதி பொய்யான சில ஆவணங்களை உருவாக்கியிருக்கிறார். அது தாவா சொத்து தொடர்புடையது அல்ல. அந்த ஆவணங்களுக்கு சட்ட அங்கீகாரம் இல்லை. அவை போலியாக மற்றும் பெயரளவு வாதி, சமூக விரோதிகள் உதவியுடன் சட்டவிரோதமாக பிரதிவாதிகளின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய அற்ப்பத்தனமாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, சட்ட விரோதமாக சுவாதீனத்தை அடைவதற்கு முயற்சி செய்வதற்காக உருவாக்கியிருக்கிறார்.

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:32:40 +0530

(iii). பிரதிவாதிகள் மேற்படி டிரஸ்ட் அசோசியேஷனின் பணியாளர்கள் மற்றும் தாவா சொத்தின் பராமரிப்பாளர்கள் ஆவார்கள். அரசு அதிகாரிகள் சரியாகவும், தனிப்பட்ட முறையில் தாவா சொத்தை ஆய்வு செய்து உட்பிரிவு செய்து இருக்கிறார்கள். வாதிக்கு தாவா சொத்தை பொறுத்து எவ்வித உரிமையும், உரிமை மூலமும் இல்லை. அனைத்து வருவாய் பதிவேடுகளும் புல எண்.2287/8-க்கு சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் பெயருக்கு தாக்கலாகி வருகிறது. அதனால் தாவா சொத்தில் சுவாதீனத்தில் வாதி இல்லை என்று தெளிவாக தெரிய வருகிறது.

(iv). மேலும் பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்துமீறி உள்ளே நுழைய எவ்வித தேவையும் எழவில்லை. ஏனெனில் வெளிபடையாக 1, 2 பிரதிவாதிகளின் சுவாதீனம் மற்றும் அனுபோகத்தில் முழுவதுமாக இருந்து வருகிறது. மேலும், R.S.No.2287/2, 2287/8-ன் பழைய புல எண்.527பகுதி. தாவா சொத்தான புல எண்.2287/8 விஸ்தீரணம் 0.22.50 ஹெக்டேர் சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் உரிமையாளர் ஆவார். சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் பெயரில் R.S.No.2287/8-க்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்து முழுவதுமாக சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் சுவாதீன அனுபோகத்தில் இருந்து வருகிறது.

(v). உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 80-ன் கீழ் நடைமுறையை பின்பற்றாததால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல. தாவா சொத்தை பொறுத்து வாதி இப்பிரதிவாதிகளுக்கு எதிராக அ.வ.எண்.84/2006 வழக்கு தாக்கல் செய்து, விசாரணை சமயத்தில் வாதி நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தவறுக்காக தள்ளுபடி

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:32:43 +0530

செய்யப்பட்டிருக்கிறது. அந்த வழக்கை திரும்ப கோப்பிற்கு எடுக்க வாதி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் இவ்வழக்கு உரிமை நடைமுறை சட்டம் பிரிவு 11-ன் படி முன் வழக்கு தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரியவருகிறது.

(vi). பொய்யான மற்றும் அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை வாதி வழக்குரையில் கூறியிருக்கிறார். மேலும், வாதி தூய்மையற்ற கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகியிருக்கிறார். மேலும் நீதிமன்றத்தை தவறாக வழிநடத்தி நீதிமன்றத்தில் பொய்யான மற்றும் தவறான அடிப்படையற்ற வாக்குமூலம் அளித்து உத்தரவு பெற முயற்சி செய்கிறார். தாவா சொத்து சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷனுக்கு பாதித்தியப்பட்டது. கோயம்புத்தூர் அதன் மறை மாவட்டம். அதற்கு பிஷப் நியமிக்கப்பட்டிருக்கிறார். பிரதிவாதிகள் அதில் பணியாளர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் ஆவார்கள். உண்மையான உரிமையாளரை இவ்வழக்கு தரப்பினராக சேர்க்கப்படவில்லை. அதனால் வழக்கு அவசிய தரப்பினர்களை சேர்க்காததால் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியதாக இருக்கிறது.

(vii). இவ்வழக்கு தாக்கல் செய்ய எவ்வித வழக்கு மூலமும் இல்லை. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முதல் நோக்கு வழக்காதாரம் ஆவணங்களின் சமநிலை வாதிக்கு ஆதரவாக இல்லை. அதனால் ஈடு செய்ய முடியாத இழப்பு வாதிக்கு ஏற்படக்கூடியதில்லை. பிரதிவாதிக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு கஷ்ட

P. MURUGESAN Digitally signed by P. MURUGESAN Date: 2026.06.18 17:32:46 +0530

நஷ்டம் ஏற்பட்டுவிடும். அது ஈடு செய்ய முடியாதது. அதனால் வாதியின் வழக்கை நஷ்ட ஈட்டு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேபோல 1ஆம் பிரதிவாதியின் கூடுதல் எதிர் வழக்குரையை 2ஆம் பிரதிவாதி பின்னேற்பு(Adopt) செய்திருக்கிறார்.

<u>4). 3,4 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்</u> :

(i). வாதியின் வழக்கு பொய்யானது அற்ப்பத்தமானது மற்றும் அலைகழிவானது. அது சட்டப்படியும், பொருண்மைகள் படியும் நிலைக்கத்தக்கது அல்ல. 1ஆம் பிரதிவாதியின் சொத்துக்கள் ஜென்மிக்கு முதலில் பாத்தியப்பட்டது. அதன் பின்பு அரசுக்கு பாத்தியம் ஆகிவிட்டது. கூடலூர் ஜென்மம் நிலங்கள் தொடர்பாக செட்டில்மெண்ட் அலுவலர் சரியான விசாரணை மேற்கொண்டு, தாவா சொத்தான சர்வே எண்.2287/8 நிலத்திற்கு சர்ச் மிஷனரி டிரஸ்ட் அசோசியேஷன்க்கு ரயத்துவாரி பட்டா வழங்கியிருக்கிறார். பின்பு மேற்படி சொத்திற்கான பட்டா சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் பெயருக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

(ii). சர்வே எண்.2287/2 அரசுக்கு பாத்தியப்பட்ட அனாதீன நிலமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனால் 1ஆம் பிரதிவாதியின் சொத்தின் மீது வாதி கோரியுள்ள உரிமை நிலைக்கத்தக்கது அல்ல. தாவா சொத்தின் புல எண்.2287/8, 2 என்று பொய்யாக போலியாக கற்பனையாக கூறபட்டுள்ளது. 1, 2ஆம் பிரதிவாதிகள் வருவாய் பதிவேடுகளின் படி தாவா சொத்துகளை பொருத்து பதிவு செய்யப்பட்ட

உரிமையாளர்கள் ஆவார்கள். தாவா சொத்து தொடர்பாக நடைபெற்ற முன் வழக்கு தொடர்பாக பிரதிவாதிக்கு எதுவும் தெரியாது. ஒரே கருப்பொருள் சொத்தைப் பொறுத்து இரு வழக்குகள் தாக்கல் செய்ய முடியாது. அதனால் சட்டத்தின் படி இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது.

(iii). தாவா சொத்தில் 6 நபர்கள் சுவாதீனத்தில் இருந்து வருவதாக வழக்குரையில் கூறப்பட்டுள்ளது. அவர்கள் இவ்வழக்கின் அவசிய கட்சிக்காரர்கள் ஆவார்கள். அதனால் இவ்வழக்கு அவசிய கட்சிக்காரர்களை தரப்பினர்களாக சேர்க்காததால் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த காரணத்திற்காக இவ்வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியதாக இருக்கிறது. வாதி வழக்குரையில் கூறியுள்ள வீட்டு கதவு எண் தாவா சொத்தில் இருக்கிறது என்பதற்கான எவ்வித ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

(iv). வாதி புல எண்.2287/2 சொத்தை ஆக்கிரமிப்பு செய்து, தண்டப்பணம் செலுத்தி இருந்தால் அதன் மூலம் அரசு சொத்தில் வாதிக்கு எவ்வித உரிமையும் கிடைக்கக்கூடியது இல்லை. தாவா சொத்தில் வாதி குடியிருக்கவில்லை. வருவாய் பதிவேடுகளில் அனாதீனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வேறு பகுதியில் வாதி குடியிருக்கிறார். 1ஆம் பிரதிவாதி தாவா சொத்தைப் பொறுத்து பதிவு செய்யப்பட்டுள்ள பட்டாதாரர் ஆவார். அதனால் வாதிக்கு சுவாதீனத்தின் படி உரிமை தாவா சொத்தை பொறுத்து இல்லை. அரசுக்கு எதிராக எவ்வித வழக்கு மூலமும் இல்லை. அதனால், அரசு இவ்வழக்கில் தேவையில்லாமல் தரப்பினராக சேர்க்கப்பட்டிருக்கிறார்.

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:32:53 +0530

அதனால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியதாக இருக்கிறது. மேலும் உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 80 கடைப்பிடிக்கப்படவில்லை.

(v). தாவா சொத்தை பொருத்து விளம்புகை பரிகாரம் கோராமல் இவ்வழக்கை வாதி தாக்கல் செய்திருக்கிறார். அதனால் வாதியின் வழக்கை நஷ்ட ஈட்டு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று 4ஆம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 4ஆம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை 3ஆம் பிரதிவாதி தரப்பில் பின்னேற்பு(Adopt) செய்யப்பட்டிருக்கிறது.

5). இவ்வழக்கில் தரப்பினர்கள் தாக்கல் செய்துள்ள வாதுரைகள் மற்றும் வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்து இவ்வழக்கை தீர்வு செய்வதற்கு, கூடலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 25.08.2014-ஆம் தேதி கீழ்க்கண்ட எழுவினாக்களை வனைந்திருக்கிறது.

1) **Whether the plaintiff is in peacefull possession and enjoyment of the suit property ?**

2) **Whether the plaintiff entitled for the relief as setout for the plaint ?**

3) **To what reliefs ?**

6). இந்நீதிமன்றம் வாதுரைகள், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்து இவ்வழக்கை தீர்வு செய்வதற்கு 11.09.2025 மற்றும் 16.04.2026 ஆகிய தேதிகளில் பின்வரும் கூடுதல் எழுவினாக்களை வனைந்திருக்கிறது.

1) **Whether the relief of declaration is barred by limitation ?**

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:33:04 +0530

2) Whether the suit is bad for non joinder of necessary parties ?

3) Whether the suit is bad for without asking declaration of title over the suit schedule property ?

7). வாதி தரப்பில் வா.சா.1 விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 விசாரணை செய்யப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.24 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8). எழுவினாக்கள் 1, 2 மற்றும் கூடுதல் எழுவினாக்கள் 1 முதல் 3-ற்கான தீர்வு :

(i). தாவா சொத்துக்களை வாதியின் மாமனார் குழந்தை மேஸ்திரி 1950ஆம் ஆண்டு முதல் கதவு எண்.12/147(பழையது), புதிய கதவு எண்.14/378 வீடு கட்டி, விவசாயம் செய்து, சுவாதீன அனுபோகம் செய்து வந்து, அவர் இறந்த பின்பு குழந்தை மேஸ்திரியின் மகனும், வாதியின் கணவருமான ஜெயவேல் வாரிசு முறையில் தாவா சொத்தை அடைந்து, சுவாதீன அனுபோகம் செய்து வந்து, ஜெயவேல் இறந்த பின்பு வாதி வாரிசு முறையில் அடைந்து சுவாதீன அனுபோகம் செய்து வருவதாகவும் 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு தவறாக வருவாய் ஆவணங்கள் பெற்று வாதியின் சுவாதீன அனுபோகத்தை தடையிடைஞ்சல் செய்ததால் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரியும், 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்று வழக்குரை மற்றும் வா.சா.1-ன் முதல் விசாரணை சாட்சியத்தில்

கூறப்பட்டுள்ளது. மேலும், வாதியின் வழக்குரை சங்கதிகளை நிரூபிக்க வேண்டி வாதி தரப்பில் வாதி வா.சா.1-ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது.

(ii). வா.சா.ஆ.1 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் பழைய கதவு எண்.12/147B, புதிய கதவு எண்.14/378, நெல்லியாளம் MGR நகரில் வாதி குடும்பத்தார் வசித்து வருவதாக முகவரி குறிப்பிட்டு 2005-2009ஆம் ஆண்டு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலம் வழங்கப்பட்ட குடும்ப அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.2, வா.சா.ஆ.4, வா.சா.ஆ.11 சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் 31.03.1981, 19.11.1982, 06.01.1978 மற்றும் 27.03.1988ஆம் தேதிகளில் கதவு எண்.12/147B-க்கு ஜெயாவேலு பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் அசல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.3 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 31.03.1984ஆம் தேதியிட்ட கதவு எண்.12/147A-க்கு ஜெயாவேல் பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீது அசல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.5 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 21.02.2009ஆம் தேதி 1418 பசலி ஆண்டுக்கு புல எண்.2287/2-க்கு வாதி செலுத்திய நிலவரி ரசீது அசல் என்பது தெரியவருகிறது.

(iii). வா.சா.ஆ.6 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் கதவு எண்.12/147A-க்கு 1986-87 ஆண்டுக்கு ஜெயவேல் பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீது ஒளிநகல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.7 சான்றாவணத்தை பரிசீலனை

P. MURUGESAN Digitally signed by P. MURUGESAN Date: 2026.06.18 17:33:11 +0530

செய்கையில் தொலைபேசி எண்.220401-க்கு கதவு எண்.14/378 இந்திரா நகர், பந்தலூர் முகவரியில் வசித்த வாதிக்கு தொலை தொடர்பு துறை அனுப்பிய பில் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.8, வா.சா.ஆ.9 சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் 13.08.1979, 23.08.1979ஆம் தேதிகளில் பி.கொளந்தன், சூப்ரவைசர் கோ-ஆப்ரேட்டிவ் ஹோல்சேல் சொசைட்டி லிமிடெட்க்கு சொந்தமான பட்டா நிலமான சர்வே எண்.521-ல் கிழக்கு பிரிவு 19-ஆம் நம்பர் அருகில் உள்ள ஆக்கிரமித்துள்ள 30 செண்ட் நிலத்தை காலி செய்ய வேண்டி அளித்த அறிவிப்புகள் அசல் என்பது தெரியவருகிறது.

(iv). வா.சா.ஆ.10 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் வாதியின் கணவர் CWS இந்தியா லிமிடெட், கரோலின் எஸ்டேட்டிற்கு எதிராக கூடலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண்.69/1979 உள் இ.ம.எண்.20/1980-ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் என்பதும், அறிக்கை மற்றும் வரைபடத்தில் புல எண்.521-ல் கதவு எண்.12/147B மற்றும் மாட்டு கொட்டகை இருப்பதாகவும், புல எண்.524-ல் எவ்வித வீடும் இல்லை என்றும், புல எண்.521-ல் 30 செண்ட் நிலத்தில் வாதியின் வீடு மற்றும் கால்நடை கொட்டகையுடன் சுவாதீனத்தில் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.12 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் நிலவரி ரசீதில் எழுத்துக்கள் எதுவும் புலப்படாததால் மேற்படி சான்றாவணம் குறித்து எதுவும் இந்நீதிமன்றத்தில் தெரியவரவில்லை என்பது தெரியவருகிறது.

(v). வா.சா.ஆ.13 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் புல எண்.2287/2-க்கு வாதி தமிழரசி செலுத்தியுள்ள நிலவரி ரசீகள் (எண்ணிக்கை 16) அசல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.14 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் இந்திரா நகர், கதவு எண்.12/147A மற்றும் 12/147B-க்கு வாதி பெயரில் நெல்லியாளம் நகராட்சியில் செலுத்தப்பட்டுள்ள சொத்து வரி ரசீதுகள் (எண்ணிக்கை 6) என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.15 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் வாதி மின் இணைப்பு எண்.03412017227-க்கு செலுத்தியுள்ள மின் கட்டண ரசீதுகள் அசல் (எண்ணிக்கை 12) என்பது தெரியவருகிறது.

(vi). 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தான புல எண்.2287/8 சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷனுக்கு பாத்தியப்பட்டது. மேற்படி புல எண்.2287/8-க்கு சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டு, மேற்படி புல எண்.2287/8 சொத்து சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் சுவாதீன அனுபோகத்தில் இருந்து வருகிறது. ஆனால், இவ்வழக்கின் அவசிய கட்சிக்காரரான சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷனை தரப்பினராக சேர்க்கவில்லை. புல எண்.2287/2 தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலம் அரசுக்கு பாத்தியப்பட்டது. மேலும், தாவா சொத்தின் பழைய புல எண்.527 ஆகும். தாவா சொத்தில் வாதியின் வீடு இல்லை. மேலும், வாதி தாவா சொத்தை பொறுத்து சுவாதீன அனுபோகத்தில் எப்போதும் இருந்தது இல்லை என்றும், அதனால் வாதியின் வழக்கை தள்ளுபடி

P.
MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:33:19 +0530

செய்ய வேண்டும் என்று முக்கிய எதிர்வாதம் 1, 2 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை மற்றும் சாட்சியத்தில் எழுப்பப்பட்டுள்ளது.

(vii). அதேபோல, தாவா சொத்தான புல எண்.2287/8 சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷனுக்கு பாத்தியப்பட்டது. மேற்படி புல எண்.2287/8-க்கு வருவாய் ஆவணங்கள் சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் பெயரில் தாக்கலாகி வருகிறது. மேற்படி புல எண்.2287/8-ன் சுவாதீன அனுபோகம் சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் வசம் இருக்கிறது. மேலும், மற்றொரு தாவா சொத்தான புல எண்.2287/2 தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலம் அரசுக்கு பாத்தியப்பட்டது. புல எண்.2287/2-ல் வாதியின் வீடு இல்லை. மேலும், புல எண்.2287/2 மற்றும் 2287/8-ல் வாதி சுவாதீன அனுபோகத்தில் இல்லை என்று முக்கிய எதிர்வாதம் 3, 4 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையில் எழுப்பப்பட்டுள்ளது.

(viii). மேலும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை சங்கதிகளை நிரூபிக்க வேண்டி, 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 விசாரணை செய்யப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.24 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. அரசு தரப்பான 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

(ix). பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2, பி.வா.சா.ஆ.4, பி.வா.சா.ஆ.15 மற்றும் பி.வா.சா.ஆ.23 சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் 07.07.2006, 03.04.2012, 21.08.2025 மற்றும் 28.09.2018ஆம் தேதியிட்ட பந்தலூர் வட்டம், நெல்லியாளம் கிராமம்,

பட்டா எண்.183, புல எண்.2285/2 விஸ்தீரணம் 25.0 ஏர்ஸ், புல எண்.2287/8 (தாவா சொத்து) விஸ்தீரணம் 22.5 ஏர்ஸ், புல எண்.2289/1 விஸ்தீரணம் 1.38.0 ஹெக்டேர் நிலம் சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் பெயரில் 10 பிரிவு சிட்டா, அடங்கல் கணக்குகள், 10(1) பிரிவு சிட்டாக்கள் தாக்கலாகி வருகிறது என்பது தெரியவருகிறது. பி.வா.சா.ஆ.3 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 31.07.2006ஆம் தேதியிட்ட புல எண்.2287/8-ன் புல வரைபடம் என்பது தெரியவருகிறது.

(x). பி.வா.சா.ஆ.5 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 22.03.2012ஆம் தேதியிட்ட கூடலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் புல எண்.2287/8(தாவா சொத்து) மற்றும் புல எண்.2285/2, 2289/1-க்கான வில்லங்க சான்றிதழ் என்பது தெரியவருகிறது. பி.வா.சா.ஆ.6, பி.வா.சா.ஆ.17 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 26.09.1947ஆம் தேதியிட்ட சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் Certificate of Incorporation என்பது தெரியவருகிறது. பி.வா.சா.ஆ.7, பி.வா.சா.ஆ.18 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் Memorandum and Article of Association of the church of south india association / Deed என்பது தெரியவருகிறது.

(xi). பி.வா.சா.ஆ.8, பி.வா.சா.ஆ.19 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் Manueal சான்றாவணம் என்பது தெரியவருகிறது. பி.வா.சா.ஆ.9, பி.வா.சா.ஆ.20 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் Constitution of church of south india association என்பது

தெரியவருகிறது. பி.வா.சா.ஆ.10, பி.வா.சா.ஆ.21 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் Constitution of church of south india Diocese of Coimbatore என்பது தெரியவருகிறது. பி.வா.சா.ஆ.11, பி.வா.சா.ஆ.22 சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் பட்டா எண்.656, புல எண்.2289/1, பழைய புல எண்.527பாகம், புல எண்.2287/1, பழைய புல எண்.527பாகம், புல எண்.2285/2, பழைய புல எண்.527பாகம் சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் பெயரில் தாக்கலாகி வருகிறது என்பது தெரியவருகிறது.

(xii). பி.வா.சா.ஆ.12 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 21.08.2025ஆம் தேதியிட்ட பந்தலூர் வட்டம், நெல்லியாளம் 1 கிராமம், பட்டா எண்.183, புல எண்.2285/2 விஸ்தீரணம் 0.25.00 ஹெக்டேர் நிலம் சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் பெயரில் தாக்கலாகி வருகிறது என்பது தெரியவருகிறது. பி.வா.சா.ஆ.13 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 21.08.2025ஆம் தேதியிட்ட பந்தலூர் வட்டம், நெல்லியாளம் 1 கிராமம், பட்டா எண்.183, புல எண்.2287/8(தாவா சொத்து) விஸ்தீரணம் 0.22.50 ஹெக்டேர் நிலம் சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் பெயரில் தாக்கலாகி வருகிறது என்பது தெரியவருகிறது.

(xiii). பி.வா.சா.ஆ.14 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 21.08.2025ஆம் தேதியிட்ட பந்தலூர் வட்டம், நெல்லியாளம் 1 கிராமம், பட்டா எண்.183, புல எண்.2289/1 விஸ்தீரணம் 1.38.00 ஹெக்டேர் நிலம் சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் பெயரில் தாக்கலாகி வருகிறது என்பது தெரியவருகிறது.

பி.வா.சா.ஆ.16 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 01.09.2025ஆம் தேதியிட்ட புல எண்.527/4, 2285/2, 2287/8, 2289/1-க்கான வில்லங்க சான்றிதழ் என்பதும், 05.09.2012ஆம் தேதி ஆவண எண்.1049/2012 மூலம் மூர்த்தி, அய்யம்மாள் ஆகியோர் புல எண்.2287, 2287/10, 1 1/2 செண்ட் மனையும், கட்டிடமும் உள்ள சொத்தை விவசாய கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.2,00,000/- அடமான கடன் பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது.

(xiv). பி.வா.சா.ஆ.24 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 03.07.1958ஆம் தேதியிட்ட சர்ச் மிசினரி டிரஸ்ட் அசோசியேஷன் லிமிடெட் நிறுவனம், சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷனுக்கு ஆவண எண்.2756/1958 மூலம் நெல்லியாளம் கிராமம் புல எண்.527, பட்டா எண்.134 விஸ்தீரணம் 4.96 ஏக்கர் நிலம் மற்றும் பிற சொத்துக்களை பொறுத்து உரிமை மாற்றம் செய்து கொடுத்ததற்கான ஆவணம் என்பது தெரியவருகிறது.

(xv). வழக்குரை சொத்து விவரப்பட்டியலில் இவ்வழக்கின் தாவா சொத்தாக பந்தலூர் வட்டம், நெல்லியாளம் கிராமம், புல எண்.2287/8, 2, கதவு எண்.14/378, 14/147D கட்டிடம் உள்ளடங்களாக 30 செண்ட் விஸ்தீரணம், அதன் பொதுவான நான்கு எல்லைகளாக வடக்கு, தெற்கு, மேற்கு - பாரி அக்ரோ நிலம், கிழக்கு - சிங்காரம், பப்பச்சன் மற்றும் ஜானகி நிலம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது தெரியவருகிறது.

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:33:35 +0530

(xvi). அதனால், வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4, வா.சா.ஆ.6, வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.14 சான்றாவணங்கள் இவ்வழக்கு தாவா சொத்தில் வாதி குடியிருப்பதாக சொல்லப்படும் கதவு எண்.14/378, 14/147D வீடுகள் தொடர்புடையது அல்ல என்பது தெரியவருகிறது. மேலும், புல எண்.2287/8, புல எண்.2287/2-ல் வாதி குடியிருக்கும் கதவு எண்.14/378, 14/147D வீடு இருக்கிறது என்பதனை காட்டக்கூடிய பட்டா, சிட்டா, அடங்கல், அ பதிவேடு ஆகிய வருவாய் ஆவணங்கள் எதுவும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பது தெரியவருகிறது.

(xvii). மேலும், வா.சா.ஆ.8, வா.சா.ஆ.9 சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் புல எண்.521-ல் பி.கொளந்தன் 30 செண்ட் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ததை காலி செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.10 சான்றாவணத்தில் புல எண்.521-ன் 30 செண்ட் நிலத்தில் வாதியின் கணவர் சுவாதீன அனுபோகத்தில் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் **" சர்வே எண்.521-ல் தான் 30 செண்ட் இடம் உள்ளது என கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். "** என்று சாட்சியம் அளித்திருக்கிறார். ஆனால், புல எண்.2287/8, 2287/2 அதன் இணை தொடர்பான பழைய புல எண்.521-ன் பாகம் என்பது குறித்து எவ்வித சாட்சிய சான்றாவணங்களையும் வாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் முன்னிடப்படவில்லை என்பது தெரியவருகிறது.

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:33:38 +0530

(xviii). மேலும், பி.வா.சா.ஆ.11, பி.வா.சா.ஆ.13, பி.வா.சா.ஆ.22 சான்றாவணங்களில் புல எண்.2287-ன் பழைய புல எண்.157பகுதி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பி.வா.சா.ஆ.24 சான்றாவணத்தில் நெல்லியாளம், புல எண்.527-ல் 4.96 ஏக்கர் நிலத்தை சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் உரிமை மாற்றம் மூலம் பெற்றிருக்கிறது என்பது தெரியவருகிறது. அதனால், புல எண்.2287/8-ன் இணை தொடர்பான பழைய புல எண்.157-ன் பாகம் என்பதும், பழைய புல எண்.151-ன் பாகம் அல்ல என்பதும் தெளிவாக தெரியவருகிறது.

(xix). மேலும், தாவா சொத்தில் வாதி 50 ஆண்டுகளுக்கு மேலாக சுவாதீன அனுபோகம் செய்து வருவதாக வழக்குரை மற்றும் முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ள நிலையில், அதற்கான வருவாய் துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல் அல்லது அ பதிவேடு போன்ற எவ்வித ஆவணங்களும், சாட்சியங்களும் வாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் முன்னிடப்படவில்லை என்பது தெரியவருகிறது. மேலும், வாதி வழக்குரை மற்றும் சாட்சியத்தில் 50 ஆண்டுகளுக்கு முன்பு வாதியின் மாமனார் குழந்தை மேஸ்திரி தாவா சொத்தான 30 செண்ட் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து, கதவு எண்.12/147(பழையது), புதிய கதவு எண்.14/378 வீடு கட்டி விவசாயம் செய்து வந்ததாகவும், அதில் வாதி சிறு பகுதி நிலத்தை மூசா, பாப்பட்டி, ரவிசந்திரன், கமலாதேவி, பரமசிவம், விசுவநாதன் ஆகியோர்களுக்கு விற்பனை செய்து அதில் அவர்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனால், வாதி விற்பனை செய்த நிலத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்று

P. MURUGESAN Digitally signed by P. MURUGESAN Date: 2026.06.18 17:33:42 +0530

குறிப்பிட்டு, அதனை நீக்கி மீதி விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்யாமல் வாதியின் மாமனார் ஆக்கிரமிப்பு செய்த நிலமான 30 செண்ட் நிலத்தை பொறுத்து வாதி இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்.

(xx). மேலும், பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2, பி.வா.சா.4, பி.வா.சா.ஆ.11, பி.வா.சா.ஆ.13, பி.வா.சா.ஆ.15, பி.வா.சா.ஆ.22, பி.வா.சா.ஆ.23, பி.வா.சா.ஆ.24 சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் தாவா சொத்தான புல எண்.2287/8-ன் சுவாதீன அனுபோகம் சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் வசம் இருக்கிறது என்பது தெளிவாக தெரியவருகிறது. 1, 2 பிரதிவாதிகள் அதன் பணியாளர்கள் என்று எதிர்வழக்குரையில் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பது தெரியவருகிறது. மேலும், தாவா சொத்தின் வருவாய் பதிவேடுகள் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் இருப்பதை ரத்து செய்யவும் அவை செல்லாதது என்று விளம்புகை செய்யவும் வாதி இவ்வழக்கில் பரிகாரம் கோரியிருக்கிறார். அதனால், புல எண்.2284/8 சொத்தின் அசல் உரிமையாளரான சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் இவ்வழக்கின் அவசிய கட்சிக்காரர் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷனை இவ்வழக்கில் வாதி தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கு அவசிய கட்சிக்காரரை தரப்பினராக சேர்க்காத காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xxi). மேலும், வாதியின் வழக்குரை பாரா 11-ல் " ***11.The Plaintiff further submits that on the 30th day of August 2006 the defendants No:1 and 2 have tried to***

trespass into the suit schedule property and evict the plaintiff and the other residents of the area saying that all the revenue records depicts their name as owners and therefore the suit schedule property belongs to them and not the plaintiff. The plaintiff was shocked to hear the same since she is in possession of the suits schedule property even before the year 1950 and has accured the suits schedule property from generation to generation. " *என்றும் வழக்குரை பாரா 18-ல்*

"18.The plaintiff further submits that the documents which are in the hands of the defendants No: 1 and 2 have been received by them in the year 2006 and right from that time the defendants No:1 and 2 are creating great trouble to the plaintiff and her family " என்றும் கூறப்பட்டுள்ளது.

(xxii). அதனால், வாதிக்கு 2006ஆம் ஆண்டில் தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் 1, 2 பிரதிவாதிகள் பெயருக்கு தாக்கலாகி வருகிறது என்பது தெரிய வந்திருக்கிறது என்பது தெளிவாக தெரியவருகிறது. மேலும், காலவரையறை சட்டம் 1963, விதி 58-ல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

Description of suits	***Period of limitation***	***Time from which period begins to run***
PART III – Suits relating to declarations		
58. To obtain any other declaration	***Three years***	***When the right to sue first accures.***

(xxiii). மேற்படி சட்டவிதியை பரிசீலனை செய்கையில் விளம்புகை பரிகாரத்திற்கான வழக்கு தாக்கல் செய்வதற்கான உரிமை எப்போது முதலில் எழுந்ததோ அந்த தேதியில் இருந்து 3 ஆண்டு காலத்திற்குள்ளாக இவ்வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்பது தெரியவருகிறது. ஆனால், இவ்வழக்கு

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:33:48 +0530

16.03.2012ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதனால், 1, 2 பிரதிவாதிகள் பெயருக்கு தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் தாக்கலாகி வருகிறது என்பதனை வாதி 2006ஆம் ஆண்டு நன்கு அறிந்திருக்கும் நிலையில் 3 ஆண்டு காலத்திற்குள் மேற்படி ஆவணத்தை செல்லாது மற்றும் ரத்து செய்து விளம்புகை செய்யக்கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பது தெளிவாக தெரியவருகிறது. அதனால், வாதி வழக்குரையில் கோரியுள்ள விளம்புகை பரிகாரத்தை பொறுத்து இவ்வழக்கு காலவரையறை சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xxiv). மேலும், தமிழ்நாடு பட்டா பாஸ்புக் சட்டம் 1983 பிரிவு 14-ல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. ***14. Bar of suits.— No suit shall lie against the Government or any officer of the Government in respect of a claim to have an entry made in any patta pass book that is maintained under this Act or to have any such entry omitted or amended:***

Provided that if any person is aggrieved as to any right of which he is in possession, by an entry made in the patta pass book under this Act, he may institute a suit against any person denying or interested to deny his title to such right, for a declaration of his rights under Chapter VI of the Specific Relief Act, 1963 (Central Act 47 of 1963); and the entry in the patta pass book shall be amended in accordance with any such declaration.

(xxv). மேற்படி சட்டப்பிரிவை பரிசீலனை செய்கையில் வருவாய் ஆவணமான பட்டா பாஸ் புத்தகத்தில் எந்தவொரு பதிவையும் சேர்த்தல், நீக்குதல் தொடர்பாக உரிமையியல் நீதிமன்றத்தில் அரசு அல்லது அரசு அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:33:52 +0530

தாக்கல் செய்ய தடை உள்ளது என்பதும், அதுகுறித்து உரிமையியல் நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்பதும் தெரியவருகிறது. மேலும், இவ்வழக்கில் தாவா சொத்தின் உரிமை மூலம் வாதிக்கு இருக்கிறது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை செய்யக்கோரி எவ்வித பரிகாரமும் வாதி தரப்பில் இவ்வழக்கில் கோரப்படவில்லை. அதனால், வாதி வழக்குரையில் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் மேற்படி தமிழ்நாடு பட்டா பாஸ்புக் சட்டம் 1983 பிரிவு 14-ன் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xxvi). மேலும், தாவா சொத்தான புல எண்.2287/8, 2287/2 மொத்த விஸ்தீரணம் 30 செண்ட் மற்றும் அதிலுள்ள 2 வீடுகளை பொறுத்து வாதிக்கு உரிமை மூலம் உள்ளது என்று விளம்புகை பரிகாரம் எதுவும் இவ்வழக்கில் கோரவில்லை. மேலும், 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தான புல எண்.2287/8 சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷனுக்கு பாத்தியப்பட்டது. மேலும், மேற்படி புல எண்.2287/8-க்கு வருவாய் ஆவணங்கள் சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் பெயரில் தாக்கலாகி முழு சுவாதீன அனுபோகத்தில் இருந்து வருவதாக முக்கிய எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசு தரப்பான 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் புல எண்.2287/8-க்கான வருவாய் ஆவணங்கள் சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷன் பெயரில் தாக்கலாகி வருகிறது என்றும், புல எண்.2287/2 தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலம். அது அரசுக்கு பாத்தியப்பட்டது. அந்த சொத்தில் வாதியின்

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:33:54 +0530

வீடு இல்லை. வாதி சுவாதீன அனுபோகத்தில் இல்லை என்று முக்கிய எதிர்வாதம் செய்யப்பட்டிருக்கிறது.

(xxvii). மேலும், மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் ***Anathula Sudhakar -vs- P.Buchi Reddy(dead) by Lrs. & Others, 2008 4 SCC 594*** என்ற வழக்கில்

11.1) Where a plaintiff is in lawful or peaceful possession of a property and such possession is interfered or threatened by the defendant, a suit for an injunction simpliciter will lie. A person has a right to protect his possession against any person who does not prove a better title by seeking a prohibitory injunction. But a person in wrongful possession is not entitled to an injunction against the rightful owner.

11.2) Where the title of the plaintiff is not disputed, but he is not in possession, his remedy is to file a suit for possession and seek in addition, if necessary, an injunction. A person out of possession, cannot seek the relief of injunction simpliciter, without claiming the relief of possession.

11.3) Where the plaintiff is in possession, but his title to the property is in dispute, or under a cloud, or where the defendant asserts title thereto and there is also a threat of dispossession from defendant, the plaintiff will have to sue for declaration of title and the consequential relief of injunction. Where the title of plaintiff is under a cloud or in dispute and he is not in possession or not able to establish possession, necessarily the plaintiff will have to file a suit for declaration, possession and injunction. என்று கூறியிருக்கிறது.

(xxviii). மேலும், தாவா சொத்தை பொறுத்து வருவாய் ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல், சுவாதீன சான்றிதழ் செல்லாதது என்று விளம்புகை

செய்யக்கோரியும், அதனை ரத்து செய்ய வேண்டியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறார். மேலும், பிரதிவாதிகள், வாதியின் மாமனார், வாதியின் கணவர், வாதி தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியும், விவசாயம் செய்தும் எப்போதும் சுவாதீன அனுபோகம் செய்ததில்லை என்றும் முக்கிய எதிர்வாதம் செய்யப்பட்டிருக்கிறது.

(xxix). அதனால், தாவா சொத்தின் உரிமை மூலம் மற்றும் சுவாதீன அனுபோகம் வாதிக்கு உள்ளது என்பதனை பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையில் முற்றிலும் மறுக்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவாக தெரியவருகிறது. மேலும், தாவா சொத்தின் உரிமை மூலம் அல்லது சுவாதீன அனுபோகம் குறித்து வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே ஒரு பிரச்சினை எழுகிறது என்பது தெரியவருகிறது. அதனால், தாவா சொத்தை பொறுத்து வாதிக்கு உரிமை மூலம் இருக்கிறதா என்பது குறித்து தீர்மானிக்க வேண்டியது அவசியமானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xxx). ஆனால், தாவா சொத்தை பொறுத்து வாதியின் உரிமை மூலத்தை விளம்புகை செய்யக் கோரி பாரிகாரம் எதுவும் இவ்வழக்கில் வாதி கோரவில்லை. பிரதிவாதிகள் தரப்பிலும் எதிர்பாத்திய கோரிக்கை எதுவும் இவ்வழக்கில் கோரவில்லை. அதனால், தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்பது குறித்து இந்நீதிமன்றம் தீர்வு காண முடியாது என்று கருதுகிறது.

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:34:01 +0530

(xxxi). மேலும், தாவா சொத்தை பொறுத்து வாதியின் உரிமை மூல பாத்தியம் நிரூபிக்கப்பட்டால் தான் வாதி, தாவா சொத்தை பொறுத்து வழக்குரையில் கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெறுவதற்கு உரிமையுடையவர் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனால், வாதி தாவா சொத்தை பொறுத்து வாதியின் உரிமை மூலத்தை விளம்புகை செய்ய பரிகாரம் கோராமல் இவ்வழக்கை வாதி தாக்கல் செய்திருப்பதால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும், அதனால் இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xxxii). மேலும், புல எண்.2287/2 தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலம். அதில் வாதி வீடு கட்டி, குடியிருந்து சுவாதீன அனுபோகம் செய்யவில்லை என்று அரசு தரப்பான 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் முற்றிலும் மறுக்கப்பட்டுள்ளது. மேலும், தாவா சொத்தில் உள்ள வீட்டில் வாதி குடியிருந்து, விவசாயம் செய்து வருவதற்க்கான பட்டா, சிட்டா, அடங்கல், அ பதிவேடு போன்ற ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதனால், வாதி தாவா சொத்தில் இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தனித்த சுவாதீன அனுபோகத்தில் இருந்தார் என்பது நம்பக்கூடியதாகவும், ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xxxiii). மேலும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் 30.08.2006, 21.11.2011, 10.03.2012 தேதிகளில் தாவா சொத்தில் இருந்து வெளியேறுமாறு வாதியை மிரட்டியதாக வழக்குரையில் கூறியிருக்கிறார். அதற்கான எவ்வித சாட்சிய

சான்றாவணங்களையும் வாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் முன்னிடப்படவில்லை. அதனால், 30.08.2006, 21.11.2011, 10.03.2012 தேதிகளில் தாவா சொத்தில் இருந்து வெளியேறுமாறு 1, 2 பிரதிவாதிகள் வாதியை மிரட்டினார்கள் என்பது நம்பக்கூடியதாகவும், ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xxxiv). அதனால், வாதி இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தாவா சொத்தின் தனித்த சுவாதீன அனுபோகத்தில் இருந்தார் என்பது வாதி தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும், சர்ச் ஆப் சவுத் இந்தியா டிரஸ்ட் அசோசியேஷனை தரப்பினராக சேர்க்காததாலும், காலவரையறை சட்டத்தாலும், தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோராமல் இவ்வழக்கை வாதி தாக்கல் செய்திருப்பதாலும் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும், அதனால், வாதி வழக்குரையில் கோரியுள்ள பரிகாரங்கள் பெற உரிமையுடையவர் அல்ல என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறே இவ்வழக்கு எழுவினாக்கள் 1, 2 மற்றும் கூடுதல் எழுவினாக்கள் 1 முதல் 3-ற்க்கு வாதிக்கு பாதகமாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

9). எழுவினா 3 - ற்கான தீர்வு :

வாதி வழக்குரையில் கோரியுள்ளபடி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெறுவதற்கு உரிமையுடையவர் அல்ல என்று இந்நீதிமன்றம் இவ்வழக்கு எழுவினா 2-ற்க்கு வாதிக்கு பாதகமாக தீர்வு

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:34:07 +0530

கண்டிருக்கிறது. பிரதிவாதிகள் தரப்பில் இவ்வழக்கில் எவ்வித எதிர்கோரிக்கையும் கோரவில்லை. அதனால், தரப்பினர்களுக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கக்கூடியதல்ல என்று இவ்வழக்கு எழுவினா 3-ற்க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

10). முடிவாக, வாதியின் வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பு பிறப்பிக்கப்படுகிறது. வழக்கின் செலவுத்தொகையை வாதி, பிரதிவாதிகளுக்கு செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 18.06.2026ஆம் தேதி வியாழக்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:34:10 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

கடலூர்.

வாதி தரப்பு சாட்சிகள்

வா.சா.1 தமிழரசி

வாதி தரப்பு சான்றாவணங்கள்

வ.எண்.	**தேதி**	**ஆவணத்தின் பெயர்**	**தன்மை**
வா.சா.ஆ.1	-	குடும்ப அட்டை	அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது
வா.சா.ஆ.2	31.03.1981	வீட்டு வரி ரசீது	அசல்
வா.சா.ஆ.3	31.03.1984	வீட்டு வரி ரசீது	அசல்
வா.சா.ஆ.4	-	வீட்டு வரி ரசீது	அசல்
வா.சா.ஆ.5	21.02.2009	நிலவரி ரசீது	அசல்
வா.சா.ஆ.6	-	வீட்டு வரி ரசீது	ஒளிநகல்

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:34:13 +0530

வா.சா.ஆ.7	-	தொலைபேசி கட்டணம் ரசீது	அசல்
வா.சா.ஆ.8	13.08.1979	கடிதம்	அசல்
வா.சா.ஆ.9	23.08.1979	கடிதம்	அசல்
வா.சா.ஆ.10	-	அ.வ.எண்.69/1979 இ.ம.எண்.20/1980 ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம்	நீதிமன்ற சான்றிட்ட நகல்
வா.சா.ஆ.11	06.01.1978 / 21.03.1988	வீட்டு வரி ரசீதுகள் -2	அசல்
வா.சா.ஆ.12	01.03.1961	நிலவரி ரசீது	அசல்
வா.சா.ஆ.13	-	நிலவரி ரசீதுகள் - 16	அசல்
வா.சா.ஆ.14	-	சொத்து வரி ரசீதுகள் - 6	அசல்
வா.சா.ஆ.15	-	மின் கட்டண ரசீதுகள் - 12	அசல்

பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்

பி.வா.சா.1 கவிராஜ் ஜார்ஜ்

பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்

வ.எண்.	**தேதி**	**ஆவணத்தின் பெயர்**	**தன்மை**
பி.வா.சா.ஆ.1	07.07.2006	10 பிரிவு சிட்டா	ஒளிநகல்
பி.வா.சா.ஆ.2	07.07.2006	அடங்கல் கணக்கு	ஒளிநகல்
பி.வா.சா.ஆ.3	31.07.2006	புல வரைபடம்	ஒளிநகல்
பி.வா.சா.ஆ.4	03.04.2012	10(1) பிரிவு சிட்டா	ஒளிநகல்
பி.வா.சா.ஆ.5	22.03.2012	வில்லங்க சான்றிதழ்	அசல்
பி.வா.சா.ஆ.6	-	CSITA Incorporation சான்றிதழ்	ஒளிநகல்
பி.வா.சா.ஆ.7	26.09.1947	CSITA Trust Deed	ஒளிநகல்
பி.வா.சா.ஆ.8	-	CSITA Manueal	ஒளிநகல்
பி.வா.சா.ஆ.9	27.09.1947	Constitution of CSI	ஒளிநகல்
பி.வா.சா.ஆ.10	-	Constitution of CSI Coimbatore Diocese	ஒளிநகல்
பி.வா.சா.ஆ.11	-	பட்டா எண்.656-க்கா பட்டா	ஒளிநகல்
பி.வா.சா.ஆ.12	21.08.2025	பட்டா எண்.183-க்கான 10(1) பிரிவு சிட்டா, அ பதிவேடு, புலவரைபடம்	கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது
பி.வா.சா.ஆ.13	21.08.2025	10(1) பிரிவு சிட்டா, அ பதிவேடு, புலவரைபடம்	கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது
பி.வா.சா.ஆ.14	21.08.2025	10(1) பிரிவு சிட்டா, அ பதிவேடு, புலவரைபடம்	கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:34:16 +0530

பி.வா.சா.ஆ.15	21.08.2025	அடங்கல் கணக்கு	உண்மை நகல்
பி.வா.சா.ஆ.16	01.09.2025	வில்லங்க சான்றிதழ்	கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது
பி.வா.சா.ஆ.17	26.09.1947	CSITA Incorporation சான்றிதழ்	சான்றிட்ட நகல்
பி.வா.சா.ஆ.18	26.09.1947	CSITA Trust deed	அசல்
பி.வா.சா.ஆ.19		CSITA Manueal	அசல்
பி.வா.சா.ஆ.20	27.09.1947	Constitution of CSI	அசல்
பி.வா.சா.ஆ.21	-	Constitution of CSI Coimbatore Diocese	அசல்
பி.வா.சா.ஆ.22	-	பட்டா எண்.656-க்கான பட்டா	அசல்
பி.வா.சா.ஆ.23	28.09.2018	சிட்டா	கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது
பி.வா.சா.ஆ.24	03.07.1958	உரிமை மாற்று ஆவணம்	அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.18 17:34:20 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

கடலூர்.

வரைவு / உண்மை தீர்ப்புரை	
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்	
அசல் வழக்கு எண்	7/2012
தேதி	18.06.2026